மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்

முன்னிலை:- திருமதி.N.ரேணுகா., பி.ஏ., பி.எல்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
சூலூர்

2024 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 5 ம் நாள் வெள்ளிக்கிழமை

இடை மனு எண்.2/2023

அசல் வழக்கு எண்.22/2023

1. கண்ணம்மாள், க/பெ.லேட்.மணி, இந்து, வயது 65, வசிப்பிட முகவரி கதவு எண்.3/4, புங்கன்குட்டை ரோடு, சுப்பத்தேவர் தோட்டம், சூலூர், கோயம்புத்தூர்.

2. பாலமுருகன், த/பெ.லேட்.மணி, இந்து, வயது 35, வசிப்பிட முகவரி கதவு எண்.3/4, புங்கன்குட்டை ரோடு, சுப்பத்தேவர் தோட்டம், சூலூர், கோயம்புத்தூர்.

3. கவிதாமணி, த/பெ.லேட்.மணி, இந்து, வயது 37, வசிப்பிட முகவரி கதவு எண்.3/4, புங்கன்குட்டை ரோடு, சுப்பத்தேவர் தோட்டம், சூலூர், கோயம்புத்தூர்.

...மனுதாரர்கள் / வாதிகள்

//எதிர்//

1. கந்தசாமி, த/பெ.காளியண்ணத்தேவர், வயது 45, இந்து, வசிப்பிட முகவரி கதவு எண்.10/1C, கலங்கல் ரோடு, S.V.V.நகர், சூலூர், கோயம்புத்தூர்.

2. கோவிந்தசாமி, த/பெ.பழனிச்சாமி கவுண்டர், வயது 47, இந்து, வசிப்பிட முகவரி பழைய கதவு எண்.14, புதிய கதவு எண்.9, K.G.நகர், கலங்கல் ரோடு, சூலூர், கோயம்புத்தூர்.

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் அயிட்டம் - 1 சொத்தில் உள்ள பொதுக்கிணற்றிலிருந்து மனுதாரரின் பிற சொத்துக்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் வழித்தடத்தில் பதிக்கப்பட்டுள்ள குழாய்களை பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் மற்றும் தாவா சொத்து அயிட்டம் - 1 சொத்திற்கு, அயிட்டம் - 2 சொத்து வழியாக வாதிகளின் கால்நடை, வண்டி வாகனாதிகள் கொண்டு செல்ல, வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரர்களோ

அவர்களது ஆட்களோ இடையூறு ஏற்படுத்தக்கூடாது என எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் மனுதாரர்களால் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள் : 21.02.2023

இந்த வழக்கானது 20.02.2024 அன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.R.சண்முகம், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பிரகாஷ், அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>இறுதி உத்தரவு</u>

1. மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

<u>செலவு தொகை பட்டியல்</u>

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

<u>சொத்து விபரம்</u>

<u>அயிட்டம் - 1</u>

கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், சூலூர் துணைப்பதிவு மாவட்டம், சூலூர் வட்டம், சூலூர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட சூலூர் கிராமம், க.ச.497 நெ.காலை பு.ஏ.16.90 க்கு தரம் ரூ.28.25 இதில், தற்போதைய சப்டிவிஷன்படி க.ச.497/6A4-ல் உள்ள கிணர், கிணற்றிடம், வாரி, வாய்க்கால் இவைகளுக்காக ஒதுக்கப்பட்டது பு.ஏ.0.62 இதில் கிழமேல் இட்டேரிக்காக விடப்பட்ட பு.ஏ.0.34 நீங்கலாக மீதமுள்ளதில் பு.ஏ.0.48 இதில்,

கந்தசாமி, கோவிந்தசாமியின் க.ச.497/6 பி

நெ.காலை பூமிக்கும் - வடக்கு

கந்தசாமி, கோவிந்தசாமியின் க.ச.497/6 ஏ 3

நெ.காலை பூமிக்கும் கிணற்றிற்கும் - தெற்கு

கந்தசாமி, கோவிந்தசாமியின் க.ச.497/3

நெ.காலை பூமிக்கும் - கிழக்கு

கந்தசாமி, கோவிந்தசாமியின் க.ச.497/6 ஏ 5

நெ.காலை பூமிக்கும், 1,2,3 வாதிகளின்

க.ச.497/6 ஏ 4 நெ.காலை பூமிக்கும் - மேற்கு

இதன் மத்தியில் பு.ஏ.0.38.1/2 இந்த விஸ்தீரணமுள்ள பூமியும், பின்னும் ஷை காலையில்,

ஷை க.ச.497/6 ஏ 4 நெ.காலையில் ஏ பாக பூமிக்கும் - வடக்கு

கந்தசாமி, கோவிந்தசாமியின் க.ச.497/6 ஏ 3

நெ.காலை பூமிக்கும் - தெற்கு

க.ச.497/6 ஏ 4 நெ.காலையில் ஏ பாக பூமிக்கும்,

கந்தசாமி, கோவிந்தசாமியின் க.ச.497/6 ஏ 3

நெ.காலைக்கும் - கிழக்கு

1,2,3 வது வாதியின் க.ச.494/6 ஏ 4 நெ.காலை பூமிக்கும்- மேற்கு

இதன் மத்தியில் கிணற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள பு.ஏ.0.05 இதில் பொதுவில் சரிபாதி பு.ஏ.0.2.1/2 ம்

ஆக ஒட்டு ஏ.0.41 அல்லது 0.16.5 அதாவது 17876 சதுரடி அல்லது 1660.72 சதுர மீட்டர்.

ஷை காலையில் உள்ள துரஸ்து கிணர் ஒன்றில் 1/2 பங்கும், ஷை கிணற்றில் விகிதாச்சப்படி தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளும் பாத்தியங்களும் சகிதம்.

<u>அயிட்டம் - 2</u>

கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், சூலூர் துணைப்பதிவு மாவட்டம், சூலூர் வட்டம், சூலூர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட சூலூர் கிராமம் க.ச.497/6 ஏ 4 நெ.காலையில்,

எங்களுடைய (கந்தசாமி, கோவிந்தசாமி) பூமிக்கும்- வடக்கும் தெற்கும்

கண்ணம்மாள், கவிதாமணி, பாலமுருகள்

வகையறா மீதமுள்ள பூமிக்கும் - கிழக்கும் மேற்கும்

இதன் மத்தியில்

| | | |
|---|---|---|
| கிழமேல் இருபுறம் | - | 9.2 மீட்டர் |
| கிழபுறம் தென்வடல் | - | 27 மீட்டர் |
| மேல்புறம் தென்வடல் | - | 26.2 மீட்டர் |

இந்த அளவுள்ள 244.72 சதுர மீட்டர் விஸ்தீரணமுள்ள தென்வடல் தடம் மட்டும். ஷை சொத்து சூலூர் பேரூராட்சி எல்லைக்குட்பட்டது.

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5 ஆம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

Sd/N.Renuga

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சூலூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

சூலூர்

இடைநிலை மனு எண்.2/2023

அசல் வழக்கு எண்.22/2023

இறுதி உத்தரவு

நாள்: 05.04.2024